2015 ஆகஸ்ட் 25]

124—

சத்துணவு மையம்

***23957—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் சத்துணவு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் தொகுதிக்குட்பட்ட, துறையூர் ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியில், 32 சதுர மீட்டர் பரப்பளவில் வைப்பறையுடன்கூடிய சமையலறை கட்டுவதற்கு 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது ஜன்னல் மட்டத்தில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, சத்துணவுக் கூடம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவிலே வாழும் குழந்தைகளுக்கும் வாழ்வளிக்கும் கருணை தெய்வமே, பாலூட்டும் தாய்மார்களுக்கு பேருந்து நிலையத்தில் தனியறை அமைத்துக்கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாதர் குலத்தின் இன்னல்களைப் போக்கும் மாதர்குல மாணிக்கமே! வகை வகையாய் குழந்தைகளுக்கு*

சத்தான கலவை சாதங்களை வழங்கி சத்துணவுத் துறையை மேன்மைப்படுத்திய புண்ணியத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளின் சதிவேலைகளை வீழ்த்தி வெற்றித் திருமகளாய் ஆர்.கே. நகர் தொகுதியில் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றிட்ட (மேசையைத் தட்டும் ஒலி) வாழுகின்ற வீரமங்கை வேலு நாச்சியாரே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். இந்த வினா அவைக்கு வரும் முன்னரே அதற்கான பணியை மேற்கொண்டு, 3 இலட்சம் ரூபாய் செலவிலே சத்துணவு மையக் கட்டடத்தைக் கட்டிக்கொடுத்து, மேலும் அந்த அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளிக்கு 45 இலட்சம் ரூபாய் செலவிலே ஆய்வகக் கட்டடத்தையும், அதைப்போல, சுற்றுச்சுவர் கட்டிக்கொடுக்க 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், மதுராந்தகம் நகராட்சியில், 19 வது வார்டில் இருக்கும் அங்கன்வாடி மையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகிறது. அந்த அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கேட்கின்றார். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கன்வாடி மையத்தைக் கட்டிக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துருவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்

2015 ஆகஸ்ட் 25]

என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***47282—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராஜபாளையம் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் புதியதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மாட்சிமைதாங்கிய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்திலேயே மிகப் பெரிய தொழில்நகரம் ராஜபாளையம் ஆகும். 200—க்கும் அதிகமான நூற்பாலைகளும், மருத்துவத் துணிகள் என்று அழைக்கப்படுகின்ற* bandage cloth *உற்பத்தி செய்கின்ற 50—க்கும் அதிகமான தொழிற்சாலைகளும் அந்தப் பகுதியிலே உள்ளன. இந்தத் தொழிற்சாலைகளிலே பணிபுரிய ராஜபாளையம் பகுதியில் இருந்து பத்தாம் வகுப்பு மற்றும் +2 வகுப்பில் தேர்ச்சி பெறுகின்ற*